Get Your Premium E-Commerce
WEBSITE &
ANDROID APP
for Just ₹Rs. 2999/-
SALE
+91 9853719337, 7436914247

ஆனந்த பாஸ்கர்
PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 99 04.10.2025 சனிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 99 Saturday pages 4 Rs.5/-

# கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்: ஆய்வு மேற்கொண்ட பாஜ குழு முதல்வருக்கு கடிதம்

**சென்னை,அக்.4:**

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக விரிவான அறிக்கையை கேட்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாஜக எம்.பி அனுராக் தாக்குர் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் விவரம்: 'கரூரில் சமீபத்தில் நிகழ்ந்த கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தோர் குறித்து ஆழ்ந்த கவலையுடனும் வேதனையுடனும் நான் எழுதுகிறேன். தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பாக எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழு துயரச் சம்பவ இடத்தைப்பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரையும் சந்தித்தது. மக்கள் மிகவும் வலியுடன் உள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மனதில் இந்தச் சம்பவத்துக்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து கடுமையான கேள்விகள் எழுந்துள்ளன.



இந்தச் சூழ்நிலைக்கு நீங்கள் முழு பொறுப்பேற்க வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கிய ஓர் அறிக்கையை விரைவில் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1.சம்பவத்துக்கான முதன்மை காரணங்கள்: கரூரில் கூட்ட நெரிசல் ஏற்பட வழிவகுத்த முதன்மைக் காரணிகள் மற்றும் நிகழ்வுகளின் வரிசை என்ன?

2. கூட்ட மேலாண்மை நடவடிக்கைகள்: நிகழ்வுக்கு முன்னும் பின்னும் கூட்டத்தை ஒழுங்குபடுத்தவும், நிர்வகிக்கவும் நிர்வாகம் மற்றும் சட்ட அமலாக்க நிறுவனங்கள் என்ன ஏற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தன?

3. காரண பகுப்பாய்வு: ஆரம்ப கண்டுபிடிப்புகளின்படி, தடுப்பு நடவடிக்கைகள் இருந்தபோதிலும் இந்த சோகம் ஏற்பட காரணமான குறைபாடுகள் அல்லது எதிர்பாராத சூழ்நிலைகள் என்ன?

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் இருக்க மாநில அரசு திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளை தயவுசெய்து பரிந்துரைத்து பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் இருக்க மாநில அரசு திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளை தயவுசெய்து பரிந்துரைத்து பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இச்சம்பவம் குறித்து விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்றும், இந்தச் சம்பவத்தில் கண்டறியப்பட்ட உண்மைகள் குறித்தும் பகிரங்கப்படுத்த வேண்டும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு, கரூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்ட ஒரு நகலுடன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளருடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட இந்தக் கடிதம் உங்கள் கவனத்துக்கு இணைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் பொறுப்புணர்வுடன், பொதுமக்களின் கேள்விகளுக்கு தீர்வு காணவும், துறை வாரியாக விரிவான பதில்களையும் கடிதம் கோருகிறது' என்று அந்தக் கடிதத்தில் அனுராக் தாக்குர் எம்.பி தெரிவித்துள்ளார்.


## இன்றைய நாள்

சனிகிழமை
(4–10–2025)
விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–18

பிறை: வளர்பிறை
திதி
திதித்துவயம்
நட்சத்திரம்:
அவிட்டம்
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00–10.30 மணி.
எமகண்டம்
மதியம் 1.30 – 3.00 மணி.
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 7.45–8.45 மணி.
மாலை 4.45–5.45 மணி

| | |
|---|---|
| மேஷம் | இன்பம் |
| ரிஷபம் | இறக்கம் |
| மிதுனம் | உயர்வு |
| கடகம் | நட்பு |
| சிம்மம் | ஆதரவு |
| கன்னி | அலைச்சல் |
| துலாம் | நஷ்டம் |
| விருச்சிகம் | லாபம் |
| தனுசு | நற்செயல் |
| மகரம் | களிப்பு |
| கும்பம் | சுகம் |
| மீனம் | நலம் |

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.880 குறைவு



**சென்னை,அக்.4:**

சென்னையில் நேற்று(அக்., 03) 22 காரட் ஆபரணத் தங்கம் விலை சவரனுக்கு ரூ.880 குறைந்துள்ளது.

நேற்று (அக் 02) மட்டும் தங்கம் விலை கிராமுக்கு, 70 ரூபாய் அதிகரித்து , 10,950 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு 560 ரூபாய் அதிகரித்து, 87,600 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த சூழலில் இன்று காலை தங்கம் விலை குறைந்தது. 22 காரட் ஆபரணத் தங்கம் விலை சவரனுக்கு ரூ.880 குறைந்து ஒரு சவரன் ரூ.86,720க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிராமுக்கு ரூ.110 குறைந்து ஒரு கிராம் ரூ.10,840க்கு விற்பனையாகி வருகிறது. இதன்மூலம் தங்கம் விலை மீண்டும் ரூ.87 ஆயிரத்திற்கு கீழ் சரிந்துள்ளது. அதேபோல, வெள்ளி விலையும் குறைந்துள்ளது. ஒரு கிராம் ரூ.3 குறைந்து ரூ.161க்கு விற்பனையாகி வருகிறது.

# சோனம் வாங்சுக்கை விடுவிக்கக்கோரி அவரது மனைவி உச்ச நீதிமன்றத்தில் மனு

**புதுடெல்லி,அக்.4:**

தனது கணவரை விடுவிக்கக்கோரி சோனம் வாங்சுக்கின் மனைவி கீதாஞ்சலி ஆங்மோ உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

லடாக் பகுதிக்கு மாநில அந்தஸ்து வழங்கக் கோரியும், அரசியலமைப்பு சட்டத்தின் 6-வது அட்டவணையில் லடாக்கை சேர்க்க வலியுறுத்தியும் சமூக ஆர்வலரும், கல்வியாளருமான சோனம் வாங்சுக் கடந்த மாதம் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தார். வேறு சில அமைப்புகளும் இதில் கலந்து கொண்டன.

லடாக் யூனியன் பிரதேசத்துக்கு மாநில அந்தஸ்து கோரி தலைநகர் லேயில் அங்குள்ள லே உச்ச அமைப்பு (எல்ஏபி) சார்பில் நடத்தப்பட்ட போராட்டம் கடந்த செப்டம்பர் 24-ம் தேதி வன்முறையாக மாறியது. போராட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்ற பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, லடாக்கில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், கடந்த 26-ம் தேதி சோனம் வாங்சுக்கை லடாக் போலீஸார் கைது செய்தனர். பின்னர், ராஜஸ்தானின் ஜோத்பூர் மத்திய சிறைக்கு அவர் மாற்றப்பட்டார். சோனம் வாங்சுக்குக்கு சொந்தமான இமாலயன் இன்ஸ்டிடியூட் ஆப் ஆல்டர்நேட்டிவ்ஸ் லடாக் (எச்ஐஏஎல்) என்ற பெயரிலான இன்ஸ்டிடியூட்டுக்கு வெளி நாடுகளில் இருந்து ரூ.1.5 கோடி நிதி முறைகேடான வழியில் வந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் புகார் தெரிவித்துள்ளது. மேலும், சோனம் பாகிஸ்தான் சென்று வந்தது குறித்து சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், தனது கணவர் சோனம் வாங்சுக்கை விடுவிக்கக் கோரி அவரது மனைவி கீதாஞ்சலி ஆங்மோ உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இது தொடர்பாக



அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "சோனம் வாங்சுக்கின் தடுப்புக் காவலுக்கு எதிராக ஆட்கொணர்வு (ஹீபஸ் கார்பஸ்) மனு மூலம் உச்ச நீதிமன்றத்திடம் நிவாரணம் கோரியுள்ளேன். சோனம் வாங்சுக்கின் உடல்நிலை, அவர் இருக்கும் நிலை அல்லது தடுப்புக் காவலுக்கான காரணங்கள் குறித்து இதுவரை எனக்கு எந்த தகவலும் இல்லை" என குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, செப்டம்பர் 24 வன்முறைக்குப் பிறகு மத்திய அரசை கீதாஞ்சலி ஆங்மோ கடுமையாக குற்றம் சாட்டி இருந்தார். "இந்தியாவில் உண்மையிலேயே சுதந்திரம் இருக்கிறதா? 1857ம் ஆண்டில் இங்கிலாந்து அரசியின் உத்தரவின் பேரில், 24,000 பிரிட்டிஷ்காரர்கள், 1,35,000 இந்திய சிப்பாய்களைப் பயன்படுத்தி 30 கோடி இந்தியர்களை ஒடுக்கினர். இன்று, ஒரு டஜன் நிர்வாகிகள் 2400 லடாக் காவல்துறையினரை தவறாகப் பயன்படுத்தி உள்துறை அமைச்சக உத்தரவின் பேரில் 3 லட்சம் லடாக் மக்களை ஒடுக்கி சித்ரவதை செய்கின்றனர்" என தனது எக்ஸ் பக்கத்தில் கீதாஞ்சலி ஆங்மோ குற்றம் சாட்டி இருந்தார்.

மேலும், சோனம் வாங்சுக்கை விடுவிக்கக் கோரி குடியரசுத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்டோருக்கு கீதாஞ்சலி ஆங்மோ மனு அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கரூர் துயரம்- அஸ்ரா கார்க் ஐ.ஜி., தலைமையில் சிறப்பு விசாரணைக்குழு

**கரூர்,அக்.4:**





கரூரில் கடந்த 27-ம் தேதி இரவு த.வெ.க. பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

இந்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்நிலையில், உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தவெக நிர்வாகிகள் புஸ்ஸி ஆனந்த் மற்றும் சிடிஆர் நிர்மல் குமார் மமுன்ஜாமின் மனு மீதான விசாரணை நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, கரூர் துயர சம்பவம் குறித்து அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு விசாரணைக்குழு அமைத்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூர் விவகாரம் தொடர்பாக அஸ்ரா கார்க் ஐஜி வடக்கு தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களை உடனடியாக சிறப்பு புலானய்வு குழுவினரிடம் ஒப்படைக்க கரூர் போலீசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## புஸ்ஸி ஆனந்த் முன்ஜாமின் கோரிய மனு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

**மதுரை,அக்.4:**

கரூரில் கடந்த 27-ம் தேதி இரவு த.வெ.க. பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்நிலையில், உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தவெக நிர்வாகிகள் புஸ்ஸி ஆனந்த் மற்றும் சிடிஆர் நிர்மல் குமார் மமுன்ஜாமின் மனு மீதான விசாரணை நடைபெற்று வருகிறது.

அப்போது, புஸ்ஸி ஆனந்த், சிடிஆர் நிர்மல்குமார் ஆகியோர் முன் ஜாமீன் கோரிய வழக்கை ஒத்திவைக்க காவல்துறை தரப்பில் கோரிக்கை வைத்தனர்.

இதற்கிடையே, புஸ்ஸி ஆனந்த் மற்றும் காவல்துறை தரப்பு வாதங்கள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில், தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார் முன்ஜாமின் கோரிய மனுக்கள் மீதான தீர்ப்பை ஐகோர்ட் கிளை ஒத்திவைத்துள்ளது.

# ஆபரேஷன் சிந்தூரில் பாகிஸ்தான் ராணுவம் இழந்தது என்ன?

**பட்டியலிட்ட இந்திய விமானப் படை**


**புதுடெல்லி,அக்.4:**

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலின்போது, 4 முதல் 5 போர் விமானங்கள், ரேடார்கள், கட்டுப்பாட்டு மையங்கள், ஓடுபாதைகள் உள்ளிட்டவற்றை பாகிஸ்தான் இழந்ததற்கான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதாக இந்திய விமானப் படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய விமானப் படை தினம் வரும் 8-ம் தேதி கொண்டாடப்பட் உள்ள நிலையில், அதை முன்னிட்டு டெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய ஏ.பி. சிங், இந்திய விமானப் படையின் தொலைநோக்குத் திட்டங்கள், ஆபரேஷன் சிந்தூரின்போது பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட இழப்புகள் உள்ளிட்டவை குறித்த கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

அப்போது அவர் கூறியது: "விமானப்படை தனது போர் திறன்களை மேம்படுத்த 2047-க்கான செயல்திட்ட வரைபடத்தை உருவாக்கியுள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றி என்பது முப்படைகளின் கூட்டு உணர்வுக்குக் கிடைத்த வெற்றி. ஆபரேஷன் சிந்தூரின்போது பாகிஸ்தான் ராணுவம் அதிக இழப்புகளைச் சந்தித்தது. குறிப்பாக, நீண்ட தூர தாக்குதலுக்கான 4 முதல் 5 போர் விமானங்கள், வான்வழி எச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு, ரேடார்கள், ஓடுபாதைகள், ஹேங்கர்கள் உள்ளிட்ட இழப்புகளை நாம் பாகிஸ்தானுக்கு ஏற்படுத்தினோம்.



இந்தியா தெளிவான நோக்கத்துடன் ஆபரேஷன் சிந்தூரைத் தொடங்கியது. குறிக்கோள் அடையப்பட்ட உடன் மோதலை விரைவாக முடிவுக்குக் கொண்டு வந்தது. உலகம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது. இந்தியாவின் ராணுவ மற்றும் சிவிலியன் கட்டமைப்புகளைப் பாதுகாக்கவும், எந்தவொரு எதிரியின் அச்சுறுத்தலுக்கும் தீர்க்கமான பதிலடி கொடுக்கவும் ஒரு உள்நாட்டு வான் பாதுகாப்பு அமைப்பை உருவாக்கும் திட்டத்தை பிரதமர் மோடி ஆகஸ்ட் 15 அன்று அறிவித்தார்.

அதன் அடிப்படையில், சுதர்சன சக்கரா எனும் இந்திய வான் பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதில் முப்படைகளும் இணைந்து பணியாற்றத் தொடங்கியுள்ளன. ஆபரேஷன் சிந்தூரின்போது ரஷ்யாவின் எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்பு இந்திய கட்டமைப்புகளை பாதுகாத்த நிலையில், உள்நாட்டு தயாரிப்பாக சுதர்சன சக்கரா உருவாக்கப்பட்டு வருகிறது" என்று அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், கூடுதலாக எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்புகளை வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளதா என்ற கேள்விக்கு நேரடியாக பதில் அளிக்காத ஏ.பி. சிங், அந்த தளம் மிகவும் நல்ல தளம் என பதிலளித்தார்.

தினம்தோறும் வெளிவரும்
ஆனந்தபாஸ்கர் இதழை
https://epaper.
anandabhaskar.com/
இணையதளத்தில்
படித்து மகிழலாம்.

# சாய் பாபா சமாதி தினத்தை முன்னிட்டு குபேர சாய் பீடத்தில் புஷ்பாஞ்சலி



**மயிலாடுதுறை, அக். 04 :** மயிலாடுதுறை நீதிமன்ற சாலை சாய் சட்டை குழும வளாகத்தில் எழுந்தருளியுள்ள குபேர சாய் பாபாவுக்கு சீரடி சாய்பாபா சமாதி தினமான விஜயதசமியில் மல்லிகை, முல்லை, அரளி, ரோஜா, சம்பங்கி, செவ்வந்தி மற்றும் வாசனை மலர்களால் புஷ்பாஞ்சலி திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கான ஏற்பாடுகளை குபேர சாயி பீடத்தில் முதன்மை நிர்வாகிகள் வழக்கறிஞர் டாக்டர். இராம.சேயோன் மற்றும் கோசித்திரன் சாய்ராம் சேயோன் ஆகியோர் செய்திருந்தார்கள்.

# நவராத்திரி,விஜயதசமி கொண்டாட்டம்








**இராமநாதபுரம், அக்.4:** இராமநாதபுரம் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் உற்சவருக்கும், மூலவருக்கும் சிறப்பு அலங்காரத்தில் சரஸ்வதி அலங்காரத்தில் வெகு சிறப்பாக செய்திருந்தார்கள். மற்றும் ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் ELITE இராமநாதபுரம் வாசவி கிளப் பெண்கள் அனைவருக்கும் போட்டிகள் வைத்து பரிசுகள் வழங்கப்பட்டன. வெகு சிறப்பாக விஜயதசமி கொண்டாடப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**


# திருவெற்றியூர் காங்கிரஸ் அலுவலகத்தில் காந்தியடிகளின் படத்திற்கு மலர் தூவி மரியாதை



**திருவெற்றியூர், அக்.4:** தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 157 பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு திருவெற்றியூர் காங்கிரஸ் அலுவலகத்தில் காந்தியடிகளின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் திரு டிவி முருகன் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் திரு AP துரை PCC திரு வீரா ரெட்டி சர்க்கிள் தலைவர் திருமதி ஷோபனா திருமதி அனிதா காங்கிரஸ் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# நமது தேசத்தந்தை காந்தி பிறந்தநாள் விழா






**திருவண்ணாமலை, அக்.4:** திருவண்ணாமலை மாண்புமிகு பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ. வ. வேலு அவர்கள் தலைமையில் காந்தி சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் .

மற்றும் மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் C. N. அண்ணாதுரை அவர்கள், உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்



**திருவண்ணாமலை, அக். 4:** மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் நேற்று முன்தினம் (02.10.2025) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட அலுவலக வளாகத்தில் மாவட்ட உள் விளையாட்டு அரங்கத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ்,இ.ஆ.ப, அவர்கள் உடனிருந்தார்.

மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை பள்ளி மாணவிகளுக்கான கைப்பந்து போட்டி இன்றைய தினம் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்துபோட்டிகளில்பங்கேற்கும் வீராங்கனைகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும் இப்போட்டிகள் இன்றைய தினம் முதல் 05.10.2025 வரையிலும், கல்லூரி மாணவிகளுக்கான கைப்பந்து போட்டி 08.10.2025 முதல் 11.10.2025 வரையிலும் திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறுகிறது.இப்போட்டிகளில்தமிழ் நாட்டில் உள்ள 38 மாவட்டத்தில் சேர்ந்த 646 மாணவியர்கள் கலந்து கொள்கின்றனர்.இப்போட்டியில் முதலிடம் பிடிக்கும் அணிக்கு 12 இலட்சமும், இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கு 8 இலட்சமும் மற்றும் மூன்றாம் இடம் பிடிக்கும் அணிக்கு 4 இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

இந்நிகழ்வில் மாநில தடகள சங்கத் துணைத்தலைவர் திரு.எ.வ.வே.கம்பன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இரா.இராம்பிரதீபன், விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் திருமதி. சண்முகப்பிரியா, திரு வண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜ் குமார் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள் விழா தீபாவளி சிறப்பு விற்பனை



**திருவாண்ணாமலை, அக்.4:** திருவாண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் நடைபெற்ற உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள் விழா மற்றும் தீபாவளி சிறப்பு விற்பனையை துவக்கிவைத்தார்.

திருவாண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ்,இ.ஆ.ப, அவர்கள் நேற்று முன்தினம் (02.10.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் நடைபெற்ற உத்தமர் காந்தியடிகளின் 157 வது பிறந்த நாளை முன்னிட்டு மகாத்மா காந்தியடிகள் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி தீபாவளி கதர் சிறப்பு விற்பனையை துவக்கிவைத்தார்.

அறவாழ்க்கை, நேர்மை, துணிச்சல், அமைதி என பல்வேறு நெறிகளுக்கு இன்று வரை உலகத்திற்கு எடுத்துகாட்டாக மகாத்மா காந்தியடிகள் விளங்கிவருகிறார்.

எனவே தான் இந்தியாவின் தேசத் தந்தையாக மகாத்மா காந்தியடிகளை பொதுமக்கள் போற்றி வருகின்றனர். அந்நிய நாட்டுத் துணிகளைப் புறக்கணித்து , இந்தியர்களாகிய நாம் அனைவரும் கதர் ஆடைகளை அணிந்திட வேண்டும் என்பது அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் வாழ்நாள் கொள்கையாகும்.அவரது வழியில் தமிழ்நாடு அரசு நெசவாளர்கள் வாழ்வில் ஒலி ஏற்றிட கதர் கிராம தொழில் வாரியத்தின் வாயிலாக பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகிறது.

அதன்படி உத்தமர் காந்தியடிகள் அவர்களின் புகழ்மூக்கு பேருமை சேர்க்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அவரது பிறந்த நாள் விழா தமிழ்நாடு அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் தீபாவளி கதர் சிறப்பு விற்பனையை புதிய ரக ஆடைகளை பொது மக்களுக்கு வழங்கி துவக்கிவைத்தார். திருவண்ணாமலை மாவட்டத்தில் சென்ற ஆண்டு கதர் விற்பனை ரூ.78.00 இலட்சம் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.

நடப்பாண்டு இம்மாவட்டத்திற்கு ரூ.108.00 இலட்சம் விற்பனைக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டும் கதர் பாலியஸ்டர் மற்றும் பட்டு ஆகிய ரகங்களுக்கு சிறப்புத் தள்ளுபடி 30% வழங்கப்பட்டுவருகிறது.

அரசு ஊழியர்களும் பொது மக்களும் கதர் வாரியத்திற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து கதராடைகளை வாங்கி மகிழ்வுடன் தீபாவளியை கொண்டாட வேண்டும் என்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா. இராம்பிரதீபன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.க.சரவணன், உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்) திரு. அன்பழகன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வலங்கைமானில் நான்கு ஆலயங்களின் சுவாமிகள் லாயம் பகுதியில் அம்பு போடுதல் நிகழ்ச்சி





**திருவாரூர், அக்.4:** வலங்கைமானில் நான்கு ஆலயங்களின் சுவாமிகள் லாயம் பகுதியில் அம்பு போடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் வரதராஜன் பேட்டை மகா மாரியம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் ( 02- ந்தேதி) நவராத்திரி திருவிழாவில் பத்தாம் நாள் விழாவில் மாலை 5 மணிக்கு அம்மன் ராஜ அலங்காரத்தில் காட்சி அளித்தார்.

மாலை 6 மணிக்கு அம்மன் வெள்ளி குதிரை வாகனத்தில் அம்பு போடும் நிகழ்வுக்கு வீதியுலா காட்சி புறப்பாடு நடைபெற்று, இதேபோல் வலங்கைமான் செட்டித்தெரு ஸ்ரீ வேம்படி சீதளாதேவி மகா மாரியம்மன் ஆலயத்தில் அம்மன் ராஜ அலங்காரத்தில் அம்பு போடும் நிகழ்வுக்கு குதிரை வாகனத்தில் புறப்பாடு நடைபெற்று.

ஸ்ரீபெருந்தேவி தாயார் சமேத ஸ்ரீவரதராஜ பெருமாள் ஆலயத்தில்இருந்து ஸ்ரீபெருந்தேவி தாயார் ராஜ அலங்காரத்தில் குதிரை வாகனத்தில் அம்பு போடும் நிகழ்வுக்கு புறப்பாடு நடைபெற்று, ஸ்ரீ கோதண்டராமசாமி ஆலயத்தில் இருந்து ஸ்ரீகோதண்டராமர் ராஜ அலங்காரத்தில் குதிரை வாகனத்தில் புறப்பாடு நடைபெற்று இந்த நான்கு சுவாமிகளும் வலங்கைமான் - பாபநாசம் சாலையில் ஒரு இடத்தில் ஒன்று சேர்ந்து லாயம் பகுதியில் ஒரே இடத்தில் நான்கு சுவாமிகளும் சங்கமித்து அம்பு போட்டனர். இதனை காண அப்பகுதியில் ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை அந்தந்த ஆலயத்தின் உபயதார்கள் சிறப்பாக செய்திருந்தனர். நவராத்திரி திருவிழா ஏற்பாடுகளை ஆலய செயல் அலுவலர் கோ.கிருஷ்ணகுமார், தக்கார்/ ஆய்வர் க.மும்மூர்த்தி, மண்டகப்படி உபயதாரர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் சிறப்பாக செய்து வருகின்றனர்.

# நவராத்திரி உற்சவம் நிறைவு (ம) திருவிளக்கு பூஜை வழிபாடு







**திருவண்ணாமலை, அக்.4:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அக்டோபர் -3 மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் நவராத்திரி நிறைவு விழாவை முன்னிட்டு அபிஷேகம், அலங்காரங்கள் மற்றும் மாலை திருவிளக்கு பூஜை நடைபெற்றது.

ஏராளமான பெண்கள் திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்டு அம்மனை வேண்டி அருள் பெற்றனர். பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் தீபாரதனை நடைபெற்றது. பிரசாதங்களும்வழங்கப்பட்டன.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# சபாநாயக முதலியார் இந்து மெட்ரிக் பள்ளியில் 16-ம் ஆண்டு நவராத்திரி விழா



**சீர்காழி , அக் , 04:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் மணிக்கூண்டு அருகே உள்ள சபாநாயக முதலியார் இந்து மெட்ரிக் பள்ளியில் 16-ம் ஆண்டு நவராத்திரி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பள்ளி மாணவர்கள் வழங்கி கொடுத்த பொம்மைகளை வைத்து கொலு வைக்கப்பட்டு இருந்தது.

ஆசிரியர்கள் பரமசிவம், ராமநாதன் க.இளங்கோ மற்றும் சுபாஷினி ஆகியோர் பக்தி பாடல்களை பாடினார்கள்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க செயலாளர் நந்த. ராஜேந்திரன், அகோரமூர்த்தி, ச.மு.இ. மேல்நிலைப் பள்ளியின் பழைய மாணவர் உமாபதி, பேராசிரியர் வீழிநாதன், இந்து சமய அறநிலைய துறை ஓய்வு பெற்ற அலுவலர் வழக்கறிஞர் தியாகராஜன், ச.மு.இ. மெட்ரிக் பள்ளியின் நிர்வாக அலுவலர் தங்கவேலு, முதல்வர் தங்கதுரை, ஆசிரியர்கள் மற்றும் பலர் விழாவில் கலந்து கொண்டார்கள்.

பழைய மாணவர் உமாபதி அனைத்து ஆசிரியர்களுக்கும் அன்பளிப்பு வழங்கினார். கலந்து கொண்ட அனைவருக்கும் இரவு உணவு , தாம்பூல பை பள்ளி நிர்வாகம் சார்பில் வழங்கப்பட்டது.

# விஜயிடம் தலைமைத்துவ பண்பே இல்லை.. !– உயர்நீதிமன்ற நீதிபதி காட்டம்




**சென்னை, அக்.4:** தமிழக வெற்றிக் கழகத்திற்கு கடுமையான கண்டனத்தை இந்த நீதிமன்றம் தெரிவிக்கிறது.

கரூரில் நடந்தது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு.

கரூர் சம்பவம் தொடர்பாக தவெகவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. கரூர் சம்பவத்தில் கூட்டங்களுக்கு கட்டுப்பாடு கோரிய வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செந்தில்குமார் கூறியதாவது:-

தமிழக வெற்றிக் கழகத்திற்கு கடுமையான கண்டனத்தை இந்த நீதிமன்றம் தெரிவிக்கிறது. கரூரில் நடந்தது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு.

தவெக தலைவர் விஜயிடம் தலைமைத்துவ பண்பே இல்லை. பரப்புரை ஏற்பாட்டாளர்கள், தலைவர் என அனைவரும் சம்பவம் நடந்ததும் தொண்டர்களையும், அவர்களை பின் தொடர்பவர்களையும் கைவிட்டு அங்கிருந்து மறைந்துவிட்டனர்.

கரூர் துயரத்தில் அனைத்துக் கட்சிகளும் மீட்புப் பணியில் இருந்தபோது, நிகழ்ச்சியை நடத்தியவர்கள் மொத்தமாக அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

ஒரு கட்டுப்படுத்தப்படாத கலவரம்போல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு அரசு கருணை காட்டுகிறதா?

இவ்வாறு கூறியுள்ளார்.

# ஆதவ் அர்ஜுனா மீது நடவடிக்கை எடுக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு



**சென்னை, அக்.4:** கரூரில் கடந்த 27-ம் தேதி இரவு த.வெ.க. பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இதற்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் சினிமா துறையினர் என பலரும் தங்களது கருத்துகளை தெரிவித்தனர்.

இந்த சம்பவத்திற்கு திமுக அரசு தான் காரணம் என தவெக நிர்வாகிகள் தெரிவித்து வந்தனர். அந்த வகையில் ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் தள பதிவில் புரட்சியை உண்டாக்க வேண்டும் என பதிவிட்டிருந்தார். உடனே அதனை நீக்கவும் செய்தார். அதற்காக அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

## காந்தி சிலைக்கு மரியாதை



காங்கிரஸ் பொதுச் செயலாளர் சிஆர்.சுந்தரராஜன் காந்தி சிலைக்கு மரியாதை செலுத்தினார் சிவகங்கை அக்2 சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் பச்சேரி தர்மம்புரி இல்லத்தில் மகாத்மா காந்தி ஜெயந்தி விழாவை முன்னிட்டு தமிழ் நாடு காங்கிரஸ் பொதுச்செயலாளர் பச்சேரி சிஆர்.சுந்தரராஜன் மகாத்மா காந்தி திருவுருவ சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். காங்கிரஸ் நிர்வாகிகள் தொண்டர்கள் பச்சேரி கிராமமக்கள் கலந்து கொண்டனர்.

## காந்தி சிலைக்கு மரியாதை



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாளுக்கு நேற்று (02.10.2025) புரட்டாசி திருவோணம், விஜயதசமி முன்னிட்டு சுவாமி புறப்பாடாகி அம்பு போடும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

## உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினியாக காட்சி



**செய்யாறு, அக். 4:**

செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் நவராத்திரி கொலு பூஜை திருவிழா மிக விமர்சையாக நடைபெற்று வருகிறது. நேற்று பதினோராம் நாள் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஸ்ரீ மகிஷாசுரவர்த்தினியாக எழுந்தருளி காட்சி தந்து, அருள் பாலித்தார் .திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.






# இடைக்காடர் திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு

**மானாமதுரை,அக்.4:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே அமைந்துள்ளது இடைக்காட்டூர் இங்கு 140 ஆண்டுகள் புகழ்பெற்ற திரு இருதய ஆண்டவர் திருத்தலம் உள்ளது. இங்கு நடைபெறும் ஆங்கில மாதத்தின் முதல் வெள்ளி திருப்பலி பூஜையில் கலந்து கொள்ள தமிழகம் மற்றும் கேரளா பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருவார்கள். தற்போது பிற்படுத்தப்பட்டோர். மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தொன்மையான கிறிஸ்துவ தேவாலயங்களை பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள அரசு நிதியுதவி அளித்து வருகிறது. அத்திட்டத்தின் கீழ், தொன்மையான திரு இருதய ஆண்டவர் தேவாலயத்தில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு மொத்தம் 1 கோடியே 55 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் முதல் கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ள 77 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அருங்காட்சியகம் அமைத்தல், பழுதடைந்த நிறம் மாறிய ஜன்னல்கள் கண்ணாடிகளை சீர் செய்தல், தேவாலய நிகழ்வுகளை அனைவருக்கும் தெளிவாக கேட்கும் வகையில் ஒளி அமைப்பை சீர் செய்தல், பழுதான மின் சாதனங்களை மாற்றியமைத்தல், சேதம் அடைந்துள்ள பகுதியில் புதிய வண்ணம் பூசி பொலிவுறச் செய்தல், போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இராமநாதபுரத்தில் இன்று



நடைபெறவுள்ள அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மதுரையிலிருந்து சாலை மார்க்கமாக இராமநாதபுரம் செல்லும் வழியில், இடைக்காட்டூர் கிராமத்தில் உள்ள தொன்மையான திருஇருதய ஆண்டவர் திருத்தலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அப்பணிகளை விரைவாகவும், சிறப்பான முறையிலும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், தமிழரசி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், சிவகங்கைமாவட்ட கலெக்டர் பொற்கொடி, மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் சிஆர்சுந்தராஜன், சிவகங்கை மறை மாவட்ட ஆயர் ஆனந்தம். இடைக்காட்டூர் திருத்தல பங்கு தந்தை ஜான் வசந்தகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கயத்தாரில் "கருப்பு காந்தி காமராஜர் " நினைவு நாள்

## திமுக பிரமுகர் குருராஜ் அஞ்சலி

**கோவில்பட்டி, அக். 4:**

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே உள்ள கயத்தாரில் அமைந்துள்ள திமுக மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் அலுவலகத்தில் தமிழகத்தில் கல்வி கண் திறந்த பெருந்தலைவர், கர்மவீரர், தமிழக முன்னாள் முதலமைச்சர், காமராஜர் அவர்களின் 50 ஆவது நினைவு தினத்தினை போற்றும் வகையில் மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் தலைமையில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் குருராஜ் கூறுகையில், தமிழகத்தின் கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராஜரின் நினைவு தினம் இன்று. ஒரே நேரத்தில் 16,000 பள்ளிக்கூடங்களை திறந்தவர். மதிய உணவுத்திட்டம் எனும் மகத்தான திட்டம் வகுத்தவர். அணைகள் கட்டி பயிர்செழிக்கச் செய்தவர். எட்டு பேர் கொண்டு



சிறப்பான நிர்வாகம் வழங்கியவர். தலைவர்களை உருவாக்கிய பெருந்தலைவர் என்று புகழப்படுபவர் காமராஜர்.

அறிவினாற் ஆகுவது உண்டோ பிறிதின் நோய் தன்நோய்போல் போற்றாக்கடை என்ற வள்ளுவப் பேராசானின் வாய்மொழிக்கு உதாரணமாய் வாழ்ந்த மாமனிதர் காமராஜர். தமிழகத்திற்கு கல்விக்கண் தந்த பேராசான். இடைநிலைக் கல்வியைக் கூட எட்டாமல் நின்ற அம்மனிதன்தான், மாணவன் யாரும் வறுமையால் இடைநிற்றல் கூடாது என்று மதிய உணவுத் திட்டம் என்ற மகத்தான திட்டத்தை உருவாக்கினார். செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்புணர்ந்த காமராஜர், அறிவியல் தொழில்நுட்பப் பாடப்புத்தகங்களும் தமிழ் மொழியில் வெளிவரச் செய்த பெருமைக்குரியவர் என்றார்.

இந்நிகழ்வில்தூத்துக்குடி திமுக வடக்கு மாவட்ட பிரதிநிதி பவுன்ராஜ், ராஜாபுதுக்குடி பால்ராஜ், சதீஷ்குமார், கயத்தாறு ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் பரமசிவம், கயத்தாறு மகேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இளையான்குடி வாள் மேல் நடந்த அம்மன் கோவிலில் அம்பு எய்தல் நிகழ்ச்சி

**சிவகங்கை, அக். 4:**

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் பிரசித்தி பெற்ற வாள்மேல் நடந்த அம்மன் திருக்கோவிலில் ஆண்டுதோறும் நவராத்திரி விழா வெகு சிறப்பாக நடைபெறுகிறது. கடந்த மாதம் 23ஆம் தேதி முதல் அம்மனுக்கு காப்புக் கட்டி தினமும் பல்வேறு அலங்காரங்களில் அருள் பாலித்த அம்மன் விஜயதசமியை முன்னிட்டு மகிஷாசுரனை வதம் செய்யும் பொருட்டாக இரவு 7.30



மணிக்கு சிறப்பு பூஜைகள் கண்டருளி குதிரை வாகனத்தில் எழுந்தருளி கோயில் முன்பு உள்ள மகர்நோன்பு பொட்டலில் மகிஷாசுரனை அம்பு எய்து வதம் செய்யும் செய்தார். அதைத்தொடர்ந்து இரவு அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று காப்பு களையப்பட்டது. விழாவில் இளையான்குடி சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 3000 பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## நூல் வெளியீட்டு விழா



தஞ்சைத் தமிழ் மன்றம் மற்றும் குடந்தை இலக்கிய பேரவை இணைந்து நடத்திய நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.



## தினம் ஒரு குறள்

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.** - குறள் 96

ఏరుల మేలెఱింగి పలికిన పలుకులు
పాప మెడలజేసి చూపు నరతి. - కురల్ 96

होगा ह्रास अधर्म का, सुधर्म का उत्थान ।
चुन चुन कर यदि शुभ वचन, कहे मधुरता-सान ॥- कुराल 96

Allavai Theya Aramperukum Nallavai
Naati Iniya Solin - Kural 96

## அலங்காரத்தில்...



கொரட்டூர் ஆஞ்சநேயர் கோயிலில் இன்றைய நவராத்திரி அலங்காரம் உற்சவர்.

## NSS-முகாம் நிறைவு விழா



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அடுத்த எடப்பிறை கிராமத்தில்,மாம்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் NSS - முகாம் நிறைவு விழாவிற்கு தலைமை ஆசிரியர் சு.பாஸ்கரன் தலைமை தாங்கினார்.நிறைவு விழாவில் போளூர் அரிமா சங்க நிர்வாகிகள் சுரேஷ், பாண்யராஜன்,ரவிச்சந்திரன்,சௌந்தர்ராஜன், சூரியப்பிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். NSS-திட்ட அலுவலர் ராமதாஸ், உதவித்திட்ட அலுவலர்கள் தங்கராஜ், ஜெயவேல் நன்றி கூறினார் முகாமில்மாணவர் - மாணவிகள் பலர் பங்கேற்றனர்.

## மகிரா சூரவர்த்தினி அலங்காரத்தில்



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நேற்று நவராத்திரி 11 ஆம் நாள் வைபவத்தில் மூல மூர்த்தி அம்மன் மகிரா சூரவர்த்தினி அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.



சீதங்கமழும் பிறையணி செஞ்சடைச் செல்வரொடும்
ஏதங்கமழும்இருளாரென் உள்ளத்து எழுந்தருள்வாய்
வேதங்கமழும் செவ்வாயர்க்குப் பாலருள் வித்தகியே
காதங்கமழும் பொழில் சூழ் தென்கூடற் கயற்கண்ணியே-
கயற்கண்ணி மாலை சொக்கே நின் தாளே துணை.

# கவிதை அரங்கம்!



அது பூ வனம்
ரசித்து வாழ்வோம்

யாரும் அறியாத
முகம் அனைவரிடமும்
உண்டு
அது தெரியாத வரை
அனைவரும்
நல்லவர்களே

இருளான வாழ்க்கை
என்று
கவலை கொள்ளாதே
கனவுகள் முளைப்பது
இருளில் தான்


நேசிக்க யாரும் இல்லை
என
யோசிக்க வைக்கிறது
வாழ்க்கை
நேசிக்க அன்பு
வரும்பொழுது
அதை நினைக்க
மறந்துவிடுகிறது

வாழ்க்கை என்னும்
நதியின் இருபுறமும்
இருப்பது கரை என்னும்
நம்பிக்கை
அதில் பீறிட்டு ஓடுகிறது
விதி என்னும் வேடிக்கை

போராடி வாழ்வதற்கு
வாழ்க்கை ஒன்றும்
போர்க்களமல்ல

தனக்கு உண்மையாக
இருக்கும்
ஒருவனுக்கு யாருடைய
உபதேசமும்
தேவையில்லை

# உங்கள் வாழ்க்கை ஒரு இனிமையான பாடல்




ஒரு பாடலில் ஸ்வரமும் தாளமும் நேர்கோட்டை போல இருக்காது

உயர்ந்து தாழ்ந்து மாறிக்கொண்டே இருக்கும்

உங்கள் வாழ்க்கையிலும் உற்சாகம், வெற்றிகள், மகிழ்ச்சி போன்ற உயர்ந்த ஸ்வரங்களும் இருக்கும்.

அதேபோல், சில நேரங்களில் அமைதி, சோகம், மெதுவான பயணம் போன்ற தாழ்ந்த ஸ்வரங்களும். இருக்கும்

இரண்டும் இணைந்து ஒரு பாடலின் உணர்வை வெளிப்படுத்துகின்றன

அது போலவே, தாழ்ந்த சத்தங்கள் ஒரு பாடலுக்கு ஆழத்தை தரும்.

ஒரு பாடல் முழுக்க உயர்ந்த சத்தங்களால் மட்டுமே உருவாக முடியாது.

ஒரே மாதிரியான ஒலியால் ஒரு இனிமையான பாடலாக முடியாது.

உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு உயர்வும், தாழ்வும்,

நின்றுவிட்ட இடங்களும், மீண்டும் நகர்ந்த தருணங்களும்

அவை எல்லாம் சேர்ந்து உங்கள் வாழ்க்கையின் பாடலை மிகவும் இனிமையானதாக மாற்றுகிறது

தாழ்ந்த தருணங்களை வெறுக்க வேண்டாம்.

உணருங்கள்... கற்றுக்கொள்ளுங்கள்.

ஏனெனில் அந்த தருணங்களும் சேர்ந்து தான்

உங்கள் வாழ்க்கையை ....

மற்ற எல்லாரும் ரசிக்கக்கூடிய ஒரு இனிமையான பாடலாக உருவாக்குகின்றன.

உங்கள் வாழ்க்கை ஒரு அழகான இசை.

அதை ரசியுங்கள்...

அதில் மெதுவாக உங்கள் மனதின் ஆழங்களை அமைதியால் நிரப்பி விடுங்கள்

வாழ்க வளமுடன்

நன்றி - ஆனந்தி

# வாழ்தல் வரம்





பேருந்தை விட்டுக் கீழிறங்கிச் சற்று நின்று எங்கேனும் டீக்கடை இருக்கிறதா என்று தேடினான் கோபால்.

அவனுக்கு எப்பவும் எந்த ஊருக்குப் போனாலும் போய் இறங்கியவுடன் டீ குடிக்கவேண்டும். அப்படியொரு பழக்கத்தை வைத்திருந்தான்.

எதிரே தேநீர் மகிழ்தருணம் என்று பெயரிடப்பட்டிருந்து கடையொன்று கண்ணில் பட்டது.

இப்போது முன்னெழுத்து மட்டும் தேநீர் என்று வைத்துக்கொண்டு பின்னெழுத்தைக் கண்ட மேனிக்கு எழுதிக்கொள்கிறார்கள்.

நேராகச் சாலையைப் பார்த்துக் கடந்து டீக்கடைக்குள் போனான்.

சார் என்ன சாப்பிடுறீங்க? வடையா? சம்சாவா?

டீ மட்டும் போதும்.

ஒகே.. சாருக்கு ஒரு டீ போடுங்க மாஸ்டர்.. சார்.. சர்க்கரை கம்மியா? வித்அவுட்டா?

சர்க்கரை இல்லாமல் ஒரு டீ போடுங்க என்றான்.

சாருக்கு ஒரு வித்அவுட்டு.. என்று கல்லாக்காரர் கத்தினார்.

சாப்பிட்டு முடித்துவிட்டுக் காசைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தான்.

அருகிலிருந்தவரிடம் கேட்டான்.. கண்ணகி நகர் விரிவாக்கம் எப்படிப் போகணும்?

சார் ஒரே ரோடுதான்.. நீங்க பஸ்ஸை விட்டு இறங்கினீங்கல்ல.. அதையொட்டி ஒரு போர்டு இருக்கு பாருங்க.. புத்தர் நகர்னு.. அந்தப் போர்டுலேர்ந்து ஒரே ரோடுதான்.. மொத்தம் எட்டு கிராஸ் தாண்டனும்.. ஒன்பதாவது கிராஸ் இடது பக்கத் தெருவுக்குள்ள போங்க.. போனதும் ஒரு நாலுரோடு பிரியும்.. அதுல வலதுபக்கம் இருக்கு கண்ணகி நகர் விரிவாக்கம்..

தெளிவாகச் சொன்னார்.

ரொம்ப நன்றி சார்.. என்றபடி கோபாலன் மறுபடியும் சாலையைக் கடந்து வந்து புத்தர் நகர் போர்டைத் தொட்டு நடக்க ஆரம்பித்தான்.

ஒவ்வொரு குறுக்குத்தெருவும் ஒரு பெயரைக் கொண்டிருந்தது. தலைவர்களும், ஆன்மிகவாதிகளும், கவிஞர்களும் பெருகிக் கிளைப்பது நல்லதுதான்.. எளிதாக அவர்கள் பெயரை தெருவிற்கு வைத்து விடுகிறார்கள்..

இரண்டு குறுக்குத் தெருக்களைக் கடந்ததும் ஒரு கார் வந்து கோபாலனை உரசியபடி நின்றது. திரும்பிப் பார்த்தான். கோபாலனின் மாமா மகன் ரமேசு...

கோபால் மாமா.. வாங்க கார்ல ஏறுங்க போகலாம் என்றான்.

வேண்டாம்பா.. நீ போ.. நான் நடந்து வரேன்.. என்றார்.

சட்டென்று ரமேசு காரை நிறுத்தி இறங்கிக் கோபாலன் அருகே போய் வாங்க மாமா... கார்ல போகலாம்.. என்றான்.

ரமேசு.. வேண்டாம்னா விட்டுடணும்.. சும்மா வற்புறுத்தக்கூடாது.. நான் நடந்துதான் வருவேன்.. யாருடைய கார்லேயும் ஏற மாட்டேன்.. வருத்தப்படாதே.. அப்படி வருத்தப்பட்டாலும் பரவாயில்லை.. போ.. என்றபடி நடக்க ஆரம்பித்தவரை தடுத்தான் ரமேசு..

எம்மேல என்ன மாமா கோவம்? என்றான்.

உம் மேல இல்லப்பா கார் வச்சிருக்கிற நம்ப உறவுக்காரங்க மேலதான்.. அவங்க கார் வச்சிருக்கிறதால சொல்லலே.. உன்ன மாதிரிதான் அவங்களும் வற்புறுத்திக் கூப்பிட்டாங்கன்னு ஏறிப்போய் நிறைய தடவை கசப்பான அனுபவம்..

நான் அப்படி இல்ல மாமா? என்றான் ரமேசு.

நான் அப்படி சொல்ல வரலே.. இன்னொருத்தரோட கார்ல ஏறிட்டா.. அவங்களுக்கு எங்க சௌகரியமோ அங்கதான் இறக்கிவிடுவாங்க.. நாலஞ்சு பேர ஏத்திக்கிட்டு நெருக்கிக்கிட்டு துன்பப்பட்டு வரணும்.. இல்ல.. அவங்க படுற அவசரத்துக்கு நாம ஓடணும்.. ஒருத்தரு நான் வந்துடறேன்னு சொன்னே கேக்கலே.. கார் அனுப்புறேன்னாரு.. நான் பஸ்ஸ்டாண்ட் வந்து ஏறிக்கறேன்னு சொன்னேன்.. இல்ல..இல்ல.. உங்க வீட்டுக்கே டிரைவர அனுப்புறேன்னு சொன்னாரு.. சரின்னு இருந்தேன்.. கொஞ்சநேரத்துல அந்த டிரைவர் போன் பண்ணி.. சார் நீங்க கடைத்தெரு முக்குக்கு வந்துடுங்க.. எனக்கு நேரமாச்சுன்னு பறக்கறாரு.. அவசரஅவசரமாப் பையத் தூக்கிட்டு ஓடுனேன்.. எதுக்குப்பா ரமேசு.. இந்த தொல்லைங்க.?. கார் வச்சிருக்கிறவங்க பாட்டுக்குப் போயிட்டே இருங்க.. எதுக்கு வாங்க ஏறிக்கலாம்னு கூப்பிடறீங்க? நான் என்ன கார்லே பொறந்து கார்லேயே வாழறவனா? காசும் காரும் வாழ்க்கை இல்லப்பா.. வாழறதுங்கறது வரம்..அது எனக்குக் கிடைச்சிருக்கு.. என்னால உடம்புல தெம்பு இருக்கறவரைக்கும் நடக்கறேன்.. நடக்கறது நல்லதுதானே? போயிட்டு வா.. என்றபடி கோபாலன் விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தான்.

அந்த மனிதன் போவதைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான் ரமேசு.

-ஹரணி,
தஞ்சாவூர்-2.


# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



பெண் : நாம ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுகிட்டா, உங்களோட துக்கம், பிரச்சனை எல்லாத்திலும் நானும் சம பங்கு எடுப்பேன்.

ஆண் : "எனக்கு துக்கம், பிரச்சனை எதுவும் இல்லை"

பெண் : "அவசவப்படாதீங்க, நாமதான் இன்னும் கல்யாணம் செஞ்சுக்கலையே"



# தினம் ஒரு சமையல்



## வாழைப்பூ வடை

| | |
|---|---|
| கடலை பருப்பு | ஒரு ஆழாக்கு |
| துவரம் பருப்பு | முக்கால் ஆழாக்கு |
| உளுத்தம்பருப்பு | ஒரு டேபிள் ஸ்பூன் |
| நறுக்கிய வாழைப்பூ | ஒன்றரை ஆழாக்கு |

(வாழைப்பூவை நறுக்கி மோர் அல்லது தண்ணீரில் சிறிது மஞ்சள் தூள் சேர்த்து போட்டு வைக்கவும். இல்லாவிட்டால் கருத்துவிடும். பருப்புகளை ஊறவைத்து அரைத்தபின் கலக்கவேண்டும். அதுவரை இப்படி போட்டு வையுங்கள்)

| | |
|---|---|
| வரமிளகாய் | எட்டு |
| பச்சைமிளகாய் | இரண்டு |
| ஒரு துண்டு | இஞ்சி |
| ஒரு ஸ்பூன் | சோம்பு |
| தேவையான | கல் உப்பு |
| ஒரு ஸ்பூன் | பெருங்காயம் |
| பொடியாக நறுக்கிய | வெங்காயம் இரண்டு |
| இரண்டு | கொத்து கறிவேப்பிலை |
| ஒரு கைப்பிடி | கொத்துமல்லித் தழை |



பருப்பை நன்கு களைந்து பிறகு தண்ணீர் ஊற்றி ஊறவைக்க வேண்டும். இரண்டு மணிநேரம் வரை ஊற வைக்கலாம். பிறகு நீரை வடிகட்டி மேற்கூறிய உப்பு, பெருங்காயம், இஞ்சித்துண்டு, சோம்பு, மிளகாய் எல்லாம் சேர்த்து கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். இதில் வெங்காயம், வாழைப்பூ, கறிவேப்பிலை, கொத்துமல்லி சேர்த்து பாணலியில் எண்ணெய் காய்ந்ததும் போட்டு பொரித்து எடுக்கவும். வாழைப்பூ வடை அல்டிமேட்டாக இருக்கும். நீங்களும் செஞ்சு அசத்துங்க. நன்றி.

-வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

# அபின் நன்மைகள்



தாய்ப்பால் பெருக: சில தாய்மார்களுக்கு குழந்தைக்குத் தேவையான அளவு தாய்ப்பால் சுரக்காமல் இருக்கும். தாய்ப்பால் போதுமான அளவு சுரக்க அம்மான் பச்சரிசியின் பூக்களை தேவையான அளவு எடுத்து சுத்தம் செய்து, பசும்பால் விட்டு அரைத்து, பசும்பாலிலேயே கலந்து காலையில் மட்டும் பருகி வந்தால் குழந்தைக்குத் தேவையான பால் சுரக்கும்.

பெண்களின் பிரச்னைக்குத் தீர்வு: சில பெண்களுக்கு வெள்ளைப்படுதல் ஒரு பிரச்னையாக இருக்கும். அது நீங்க அம்மான் பச்சரிசி இலையை அரைத்து மோரில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் ஐந்து நாட்கள் வரை அருந்தி வந்தால் வெள்ளைப்படுதல் நின்றுபோகும்.

மரு உதிர: அம்மான் பச்சரிசி பாலை மருவின் மீது தடவி வந்தால் விரைவில் மரு உதிர்ந்து விடும்.

தாது விருத்தி: அம்மான் பச்சரிசி, தூதுவளை இரண்டையும் சம அளவு எடுத்து பாசிப்பருப்பு, உளுத்தம் பருப்பு இவற்றுடன் சேர்த்து கூட்டு வைத்து அதனுடன் தேங்காய் துருவல், நெய் கலந்து சாப்பிட்டு வந்தால் உடம்பில் தாது பலப்படும்.


வளரும் சூழல்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஈரமான இடங்களில் இது வளர்கிறது. விவசாய நிலங்களில் களையாக இது வளரும். விதை மூலம் இது இனப்பெருக்கம் அடைகிறது. இதன் இலை, தண்டு, பால், பூ ஆகியவை பயன்படுகின்றன.

நக சுத்திக்கு: இதன் பாலை விரலில் ஏற்படும் நக சுத்திற்கு தடவிர வர, விரைவில் குணமாகும்.

வாதம் போக்கும்: சிவப்பு அம்மான் பச்சரிசி மூலிகைக்கு வாதம், பிரமேகம் ஆகியவற்றைப் போக்கும் குணம் உண்டு. இது தாது விருத்தி செய்வதால் இதனை, 'வெள்ளி பஸ்பம் 'என்றும் கூறுவர்.

பால் காட்டும் வித்தை: இதன் பாலை வைத்துக்கொண்டு ஒரு வித்தை கூட காட்டலாம். ஒரு காகிதத் துண்டில் அம்மான் பச்சரிசி பாலில் ஏதாவது ஓர் உருவம் வரைந்து, உலர்த்தி பின் நண்பர்களிடம் காட்டவும். பின் அனைவரும் அது வெறும் காகிதம் தான் எனக் கூறியதும், அதை தீயில் கொளுத்தி காட்ட வரைந்த உருவம் தோன்றும். இவ்வாறு வித்தை காட்டவும் ஒரு சிறந்த மூலிகையாக இது திகழ்கிறது.

# ரசிகர்களை கவர்ந்த 'காந்தாரா சாப்டர் 1' முதல் நாள் வசூலே இவ்வளவா?



2022-ம் ஆண்டு கன்னடத்தில் வெளியாகி தென்னிந்திய மொழிகளில் வரவேற்பை பெற்ற படம் 'காந்தாரா'. இப்படத்தின் இரண்டாம் பாகமாக 'காந்தாரா சாப்டர்1' வெளியாகி உள்ளது. 30 நாடுகளில் இப்படம் நேற்று வெளியாகி ரசிகர்களின் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த நிலையில், 'காந்தாரா சாப்டர்-1' படத்தின் முதல் நாள் வசூல் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, படம் வெளியான முதல் நாளில் சுமார் 65 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் வரும் நாட்களில் 'காந்தாரா சாப்டர்-1' வசூலை வாரிக்குவிக்கும் என்றும் முதல் பாகத்தை விட இப்படம் வசூல் சாதனை படைக்கும் என நம்பப்படுகிறது.






அஜித் மற்றும் ஆதிக் ரவிச்சந்திரன் கூட்டணியில் உருவாகி சமீபத்தில் வெளிவந்த திரைப்படம் குட் பேட் அக்லி. இப்படம் உலகளவில் வசூலில் பட்டையை கிளப்பியது. அஜித்தை தாண்டி இப்படத்தில் பல விஷயங்கள் ரசிகர்களால் ரசிக்கப்பட்டது. அதில் ஒன்று சுல்தானே பாடலுக்கு நடிகை பிரியா வாரியர் போட்ட நடனம்.

இந்நிலையில், தற்போது பிரியா வாரியர் தனது இன்ஸ்டாவில் வெளியிட்ட சில அழகிய போட்டோஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# கடந்த 10 வருடங்களில் இணையத்தில் அதிகம் தேடப்பட்ட திரைபிரபலங்கள் - முதலிடத்தில் அந்த நடிகை!



இந்திய சினிமாவின் திரை பிரபலங்கள் எந்த அளவுக்கு பிரபலமாக இருக்கிறார்கள் என்பதை படங்களின் வசூலை தாண்டி, சமூக வலைதளங்களில் அவர்களை எத்தனை பேர் தேடினார்கள்? என்ற விவரத்தை வைத்தும் மதிப்பிடப்படுகிறார்கள்.

அந்தவகையில் கடந்த 10 வருடங்களில் இணையத்தில் அதிகம் தேடப்பட்ட நடிகர்-நடிகைகளின் பட்டியல் வெளியாகி இருக்கிறது.

இதில் ஷாருக்கான், சல்மான் கான், விஜய், பிரபாஸ் என நாட்டின் முன்னணி நடிகர்கள் எல்லோரையும் பின்னுக்கு தள்ளி பாலிவுட் நடிகை தீபிகா படுகோனே பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.

ஷாருக்கான், ஐஸ்வர்யா ராய், ஆலியா பட், இர்பான்கான், அமீர்கான், சுஷாந்த் சிங் ராஜ்புத், சல்மான்கான், ஹிருத்திக் ரோஷன், அக்ஷய்குமார் முறையே அடுத்தடுத்த இடங்களில் தொடருகிறார்கள்.

இந்த பட்டியலில் சமந்தா 13-ம் இடத்திலும், தமன்னா 16-ம் இடத்திலும், நயன்தாரா 18-வது இடத்திலும் இருக்கின்றனர். பிரபாஸ் 29-ம் இடமும், தனுஷ் 30-ம் இடமும் பிடித்து இருக்கின்றனர். மற்ற தமிழ் நடிகர்கள் பெயர்கள் இடம்பெறவில்லை.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com